367

367

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 OCT 1940
MADRAS

3086

பண்டிதமணி யவர்களின்

உருவப்படத் திறப்பு விழா

3986

3443

உ

பண்டிதமணி யவர்களின்

உருவப்படத் திறப்பு விழா

3086

928.948111

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 OCT 1940
MADRAS

3926

வெளியிட்டோர் :

வ. பழ. சா. அ. சாமிநாதன் செட்டியார்

,, விசுவநாதன் செட்டியார்

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை.

1940

ராஜா ஸர் அண்ணமலைச் செட்டியார் அவர்கள், Kt. L. L. D.

பதிப்புரை

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை என்னும் இப் பேரவை இங்குத் தோன்றி இற்றைக்கு முப்பத்தோராண்டுக ளாயின. இது, தான் தோன்றியநாள் தொடங்கி, கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த புலவர் பெருமக்களுடைய அறி வுரைகளால் மக்கள் அறிவைப் பெருக்கியும், பலப்பல மாண வர்களுக்கு உண்டி உடை உறையுள் முதலியன வுதவிக் கல்வி பயில்வித்துத் தனித் தமிழ்த் தேர்வுகளில் சிறந்த முறை யில் தேர்ச்சியுறச் செய்தும், "சுக்கிரநீதி" "மண்ணியல் சிறுதேர்" முதலான வடமொழி நூல்களை இருமொழிப் புலவரும் பாராட்டும்வண்ணம் திருத்தமுற மொழிபெயர்த்துப் பதிப்பித்தும் இன்னும் பல்லாற்றானும் நம் தாய்மொழியாகிய தமிழ் மொழிக்கும் சைவ சமயத்துக்கும் ஆற்றிவரும் தொண்டுகள் பலவாகும். இத்தகைய சன்மார்க்க சபை தோன்றுதற்கும், இஃது இவ்வாறு பல துறைகளினும் மேம் பட்டு உலகம் அறிய விளங்குதற்கும் ஆதிகாரணராயிருந்து, எம்பெரிய தந்தையார், எந்தையார் ஆகிய இருவரையும், எங்களையும் ஊக்கி உறுதுணையாய் உடனிருந்துஉழைத்துவருப வர்கள், **மகிபாலன்பட்டி - பண்டிதமணி - திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் ஆவர்.** அவர்கள் இச்சபையின் நல் வளர்ச்சியில் நாளும் நாளும் நாட்டமுடையவர்களென்பதை யாவரும் அறிவர். அவர்கள் இச் சன்மார்க்க சபை யென்னும் சகடத்திற்கு அச்சாணிபோல்வார்கள் என்று கூறின் அது மிகையாகாது. அவர்கள், எங்கள் குலமணியாயும், வட மொழி தென்மொழி யென்னும் இருபெரு மொழிகளையும் கற்றுத்துறைபோய புலவர் தலைமணியாயும், அறிவாலும் சீலத்தாலும் ஆராய்ச்சி யநுபவங்களாலும் முதிர்ந்த சைவ சிகாமணியாயும் விளங்குபவர்கள். ஆதலால், அன்னாருடைய **அறிவுப் படம் போன்ற உருவப் படம்** சபையின்கண் இருந்து அலங்கரித்தால், அது சபைக்கே மிக்க சிறப்பளிப்பதாகும்

என்று யாங்கள் நெடுநாட்களாக எண்ணிவந்தோம். அங்ஙனம், புலவர் திலகமாய் விளங்கும் பண்டிதமணியவர்களுடைய உருவப்படத்தைத் திறந்து நிலைநாட்டிவைக்கத்தக்கவர் யாவரென ஆராய்ந்து, எங்கள் குலதீபமும், பெருந்திருவாளரும், பெருங்கொடை வள்ளலும், அண்ணுமலைப் பல்கலைக் கழகம் முதலான கல்வி நிலையங்கட்குத் தலைவரும் ஆகிய **கனம், டாக்டர் - ராஜா. ஸர். சா. ராம. மு. அ. அண்ணுமலைச் செட்டியார் அவர்களே** தக்கவரெனத் தேர்ந்து, அவர்களிடம் எங்கள் விருப்பத்தைத் தெரிவித்தோம். அவர்களும் அன்புகூர்ந்து எங்கள் வேண்டுகோளை யேற்று இங்குவந்து படத் திறப்பு விழாவை நடத்திவைத்தார்கள். அவ்விழா, 7-7-40ல் மிக்க சிறப்பாக நடைபெற்றது. இது சன்மார்க்க சபையின் வரலாறுகளில் சிறந்ததொன்ருக என்றும் நினைவுகூரத்தக்கதாகும். படத் திறப்பு விழாவின்போது கனம், ராஜா. ஸர் அவர்கள் பேசிய முன்னுரையும், பாராட்டுரை நிகழ்த்திய பெரியார் பலருடைய பேச்சுக்களும் காரைக்குடி "குமரன்" பத்திரிகையில் வெளிவந்தன. பெரும்பாலும் அவற்றைத் தழுவியும், அன்றுவந்த வாழ்த்துப் பாடல், கடிதங்களிலுள்ள முக்கியமான பகுதிகளைத் தொகுத்தும், ராஜா, பண்டிதமணி ஆகிய இருவருடைய உருவப் படங்களுடன் இந்நிகழ்ச்சிகளைப் புத்தக வடிவமாய் அச்சிட்டு வைப்பது எதிர்காலத்தில் பெரிதும் பயன்படுமென்று யானும் என் சகோதரர் விசுவநாதன் செட்டியாரும் கருதி இப்புத்தகத்தை மகிழ்ச்சியுடன் வெளியிடலானேம்.

இங்ஙனம்:

மேலைச்சிவபுரி
24—8—40

வ. பழ. சா. அ. சாமிநாதன் செட்டியார்.



பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியார்

உ

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையில்

பண்டிதமணி யவர்களின்

உருவப்படத் திறப்பு விழா

செட்டிநாட்டு ராஜா அவர்கள்

திறந்து வைத்தார்கள்

விக்கிரம யாண்டு ஆனித்திங்கள் 24-ம் நாள் (7-7-40) ஞாயிற்றுக்கிழமைப் பிறபகல், மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபா மண்டபத்தில், அண்ணமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பேராசிரியர் **பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்களின் உருவப் படத்தைச் செட்டிநாட்டு ராஜா ஸர் அண்ணமலைச் செட்டியார் அவர்கள் Kt. L. L. D.** திறந்து வைத்தார்கள்.

விழா, மணி 4-10-க்கு ஆரம்பமாயிற்று. ராஜா ஸர் அவர்கள், ஸ்ரீமான் வ. பழ. சா. சாமிநாதன் செட்டியார் அவர்கள் இல்லத்திலிருந்து மலர் மாலை அணிவிக்கப்பெற்று மேளவாத்தியங்களுடன் அழைத்துவரப் பட்டார்கள். புகைப்படம் எடுக்கப்பட்டது. சங்கத்தின் முகப்பும் உள்ளிடமும் நன்கு அலங்கரிக்கப் பெற்றிருந்தன. உள்ளூர் வெளியூர்களிலிருந்து வந்த அறிவுடையாரும் திருவுடையாருமாகிய அன்பர்கள் பலர் கூடியிருந்தனர். ஆண்பாலாரும் பெண்பாலாருமாக 1500 பெயர்களுக்குமேலிருக்கலாம். சொற்பொழிவுகளை எல்

லோருங் கேட்பதற்கு அநுகூலமாக ஒலிபெருக்குங் கருவி வைக்கப்பட்டிருந்தது. தலைவராகிய ராஜா ஸர் அவர்கள் தமக்குரிய இருக்கையில் அமர்ந்ததும், ஸ்ரீகணேசர் செந்தமிழ்க் கலாசாலை மாணவர் கடவுள் வாழ்த்துப் பாடல்களை இன்னிசையுடன் பாடினர்.

கடவுள் வணக்கத்திற்குப் பின், அண்ணாமலைப்பல் கலைக் கழகத்துத் தமிழாசிரியர் வித்துவான் மு. அருணா சலம் பிள்ளையவர்கள் சன்மார்க்க சபையின் சார்பாக, ராஜா ஸர் அவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் ஒன்றைப் படித்துக் கொடுத்தார்கள். அப்பத்திரத்தில் ராஜா ஸர் அவர்களின் அரும்பெருங்குணஞ் செயல்களைப் புலப் படுத்தி ஒன்பது செய்யுட்கள் மிக அழகுற அமைந்திருந் தன.* ஸ்ரீமான் வ. பழ. சா. சாமிநாதன் செட்டியார் அவர்கள் பண்டிதமணியவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைக்குமாறு ராஜா அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

ராஜா அவர்கள் தலைமையேற்று, உபசாரப் பத்திரத் தில் தம்மைப்பற்றி அதிகமாகப் புகழ்ந்து கூறப்பட் டிருப்பதாயும், அது சாமிநாதன் செட்டியாருக்குத் தம்மீ துள்ள அன்பையே காட்டுகிறதென்றும் கூறினார்கள். பின், சபை நடுவண் மலர் மாலையணிந்து அலங்கரிக்கப் பெற்றிருந்த பண்டிதமணியவர்களின் உருவப் படத்தை அனைவரும் கரகோஷம் செய்யத் திறந்துவைத்து முன் னுரை கூறினார்கள். அம்முன்னுரை வருமாறு :—

“ கனவான்களே ! இந்த மேலைச்சிவபுரிச் சன் மார்க்க சபையில், அன்பும் அறிவும் மிக்கவர்கள், தமிழ் மொழியும் சைவசமயமும் விருத்தியடைய வேண்டு

*வரவேற்புப் பத்திரம் இதனிறுதியிற் சேர்க்கப் பெற்றுளது.

மென்ற விருப்பத்தால் ஊக்கத்துடன் இயற்றிவரும் அரிய தொண்டை நான் கண்டு மகிழவும், அதில் நானும் ஒரு பங்கு எடுத்துக் கொள்ளவும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததைப்பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இச்சபையின் ஆதரவில் இன்று நடைபெறும் இவ்விழா வில் ஒரு முக்கிய ஸ்தானம் வகிக்கும் பெருமையை எனக்குக் கொடுத்துக் கௌரவித்த அங்கத்தினர்களுக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தமிழ் மொழியும் சைவ சமயமும் தழைத்தோங்கச் செய்யும் நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட இச்சபை, சென்ற முப்பது வருஷங்களாகச் செய்துவரும் தொண் டின் பெருமையை நமது தமிழ் நாட்டின் இப்பகுதியி லுள்ள யாவரும் நன்கு அறிவார்கள். மொழிப்பற்றும் சமயப்பற்றும் நாட்டுப்பற்றும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதவை. கல்வி கேள்வி அறிவு ஒழுக்கம் முதலியவற்றால் மேன்மைபெற்று வாழ்க்கையிற் சிறந்த வழி காட்டிகளாய் விளங்கிய நமது முன்னோர்கள் பின் பற்றி வந்த சமயத்தை நாமும் நன்கு அறிந்து போற்றி வளர்ப்பது நமது முக்கிய கடமைகளில் ஒன்றாகும். சம யத்தையும் மொழியையும் வளரச்செய்யவும், தமிழ் நாட்டு மக்கள் தமிழ் மொழியில் உள்ள சிறந்த நூல் களின் நயங்களைக் கண்டறிந்து பாராட்டி மேன்மை யடையவும் வழிகள் அநேகம் உள்ளன. அவைகளில், சங்கங்களை ஸ்தாபித்துச் சிறந்த அறிஞர்களைக்கொண்டு சொற்பொழிவுகள் புரியச்செய்வதும், பாடசாலைகளையும் புத்தகசாலைகளையும் அமைத்துப் பிறர் படிக்க உதவு வதும் சில முறைகளாம். நமது தனவைசிய மக்களின் அறிவு வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட இச்சன் மார்க்க சபை, சென்ற முப்பது வருஷங்களுக்கு முன்ன

தாக ஆரம்பிக்கப்பெற்று இனிது நடைபெற்று வருகின்றது. பூதவுடலை நீக்கிப் புகழுடலை நிலைநிறுத்திய உயர்குணச் செல்வரும் உதாரபுருஷருமான, **வ. பழ. சா. பழநியப்பசெட்டியாரவர்கள்** முதலில் நிரந்தர அக்கிராசனாதிபதியாயிருந்து இச்சபையை ஆதரித்து வந்தார்கள். அவர்களுடைய பேராதரவாலும் ஊக்கத்தாலும் இச்சபையின் அங்கமாக "**ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க் கலாசாலை**" என்ற ஒரு கலாசாலையும், "**தொல்காப்பியனார் புத்தகசாலை**" என்ற ஒரு புத்தகாலயமும் அமைக்கப்பட்டுச் சபை கூடுவதற்கும் கலாசாலை நடைபெறுவதற்கும் ஏற்றதோர் அழகிய கட்டிடமும் கட்டப்பட்டது. இச்சபை ஏற்பட்ட இரண்டு வருஷங்களுக்குள்ளேயே அநேக அன்பர்களும் அறிஞர்களும் இதனிடம் அன்பு கொண்டு ஆதரித்தார்கள். மூன்று வருஷங்கள் இச்சபைக்குத் தலைவராயிருந்து ஆதரவளித்து வந்த பழநியப்ப செட்டியார் அவர்கள் சிவபெருமான் திருவடி நீழலையடைய, அவருடைய சகோதரர் **அண்ணாமலைச் செட்டியாரவர்கள்** இச்சபையின் தலைமைப்பதவியை வகித்து வந்தார்கள். சபை ஏற்பட்டு ஐந்து வருஷங்கள் முடிவதற்குள் சபையின் மூலதனமாக இருபதினாயிரம் ரூபாய் சேர்க்கப்பட்டதைக் கவனித்தால், அப்பொழுது அதன் தலைவருக்கு இருந்த ஊக்கமும் பொது ஜனங்களுக்குண்டான ஆர்வமும் நன்கு விளங்கும். 1925-ம் வருஷம் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் இவ்வுலக வாழ்வை விட்டு இறைவன் திருவடியைச் சேர நேரிட்டதால், பழநியப்ப செட்டியாரவர்களின் மூத்தகுமாரர் **ஸ்ரீமான் சாமிநாதன் செட்டியாரவர்கள்** சபையின் தலைமைப் பதவியை அடைந்து, அதனைத் தமது அருமைத் தந்தை

யாரின் கருத்திற்கேற்பச் சிறிதும் தளரவிடாமல், பல துறைகளிலும் விருத்திபெறச் செய்து வருகிறார்கள். எல்லாம்வல்ல இறைவன் இவர்களுக்கு ஆரோக்கிய வாழ்வையும், நீண்ட ஆயுளையும், தளராத ஊக்கத்தையும் அளித்துப், பலருக்கும் பயன்பட்டு வரும் இச்சபையைத் தமது முன்னோர்களைப்போலவே பரிபாலித்து வர அருள் புரியுமாறு பிரார்த்திக்கிறேன். நிற்க,

இப்பொழுது நமது தனவணிகர் நாட்டில் சிறந்து விளங்கும் இச்சன்மார்க்க சபை ஆரம்பமாவதற்கு ஆதி காரணமாக இருந்து, இதன் அபிவிருத்திக்காக ஆரம்ப முதல் முயன்று வருகிற பேரன்பர் ஒருவருடைய சீரிய குணங்களைப் பாராட்டி, அவர்களிடம் நமக்குள்ள அன்பையும் நன்றியையும் ஓர் அடையாள மூலமாக அறிவித்துக்கொள்ள இங்குக் கூடியிருக்கிறோம். தமது கல்வியின் மேம்பாட்டினால் தமிழ்நாடு முழுவதும் புகழ் பெற்றுவிளங்கும் **பண்டிதமணி, கதிரேசச் செட்டியாரவர்களைப்** பாராட்டுவது நமக்கே பெரிய கௌரவமாகும். **இப்பெருங் கல்வியாளர்**, தமது இலக்கிய இலக்கண அறிவு, சொல்வன்மை, ஆராய்ச்சித்திறன், மொழி பெயர்க்கும் ஆற்றல், போதனாசக்தி முதலிய சிறந்த குணங்களால் பெருமை பெற்று விளங்குகிறார்கள். இவர்கள், வடமொழியிலும் தென்மொழியிலும் நல்ல அறிவு வாய்ந்திருப்பதால் இவர்களுடைய மொழித் தொண்டு மேன்மை யுறுகின்றது. ஒரு மொழியிலுள்ள கருத்துக்களைச் சிதைவுறாமலும் தெளிவாகவும் வேறொரு மொழியில் விளக்கி யுரைப்பது எளிதன்று. சொல்நயம் பொருள்நயம் பொருந்தப் பேசுவதும் எழுதுவதும் யாவருக்கும் எளிதல்ல. சபையின் விருப்பத்திற் கிணங்கி இவ் அறிஞரால் இயற்றப்பட்டுச் சபையால் வெளியிடப்

பட்டுள்ள "சுலோசனே", "உதயன சரிதம்", "சுக்கிர நீதி", "மண்ணியல் சிறுதேர்" என்ற நூல்கள் இவர்களுடைய சிறந்த கல்வி யறிவுக்கும் நூல் இயற்றும் ஆற்றலுக்கும் ஏற்ற உதாரணங்களாக விளங்குகின்றன. இவைகளேயன்றி, "பிரதாபருத்திரீயம்", "மாலதீமாதவம்", "சாஹித்திய தருப்பணம்" முதலிய அரிய நூல்களும் பண்டிதமணியவர்கள் முயற்சியால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவைகள் விரைவில் அச்சிடப்பட்டுப் பலருக்கும் பயன் அளிக்குமென்று எதிர்பார்க்கலாம்.

பண்டிதமணியவர்களுடைய நூல் இயற்றும் ஆற்றல் ஒருபுறமிருக்க, அவர்களுடைய சொல்வன்மை அதனினும் சிறந்து விளங்குகின்றது. நயம் மிகுந்து விளங்கும் அவர்களுடைய சொற்பொழிவுகள் அறிவைப் பெருக்குந் தன்மையனவாயும் இருக்கின்றன. தேவாரம், திருவாசகம், திருக்குறள், இராமாயணம் முதலிய தெய்விக நூல்களில் உள்ள உயர்ந்த கருத்துக்களையும், மிகுந்த சுவையான பகுதிகளையும் பண்டிதமணியவர்கள் கேட்பவர் மனத்தில் பசுமரத்தாணி போலப் பதியுமாறு சொல்லவல்லவர். தமிழ்க் கல்வியைப் பரவச் செய்வதில் தளராத ஊக்கம் உடையவர்கள். மாணவர்களுக்குப் போதிப்பதன் மூலமாகவும், கற்ருேர் சபையில் சொற்பொழிவுகள் இயற்றுவதன் மூலமாகவும் இவர்கள் தமிழ்க்கல்வி நாட்டிற் பரவப் பெரிதும் உதவிவருகிருர்கள். இத்தனை புகழ் பெற்றுள்ள பண்டிதமணியவர்கள், **அண்ணுமலை சருவகலாசாலையில்** (Professor of Tamil)என்ற தலைமைத் தானத்தையும் வகித்துவருவது நம் தனவணிகர் குலத்துக்கே பெருமை தருவதாகும். **வட மொழியிலும் தென் மொழியி**

லும் வல்ல புலவராகவும், மாணவர்கள் மன முவக்கப் போதிக்கும் ஆசிரியராகவும், அரிய நூல் களை இயற்றும் நூலாசிரியராகவும், அறியாமை யையும் ஐயத்தையும் போக்கவல்ல சொற்பொழி வாளராகவும் விளங்கும் பண்டிதமணியை நன்கு அறிந்த இந்த மாகாணக் கல்வியதிகாரிகள் இவருக்குத் தகுந்த பதவிகளை யளித்துப் பெருமைப் படுத்தியிருக்கி ருர்கள். இவர்கள், சென்னை, அண்ணுமலைநகர், திருவாங் கூர் முதலிய இடங்களிலுள்ள பெரிய கல்வி ஸ்தாபனங் களில் பரீக்ஷாதிகாரியாக (The Chairman Board of Examiners in Tamil) இருந்து வருகிருர்கள். சென் னைச் சருவகலாசாலையிலும் அண்ணுமலை சருவகலாசாலை யிலும் தமிழ்ப்பாடத் திட்டக்கழகத்தில் (The Chair-man Board of studies in Tamil) தலைமை வகித்து வருகிருர்கள். யாழ்ப்பாணத்திலுள்ள ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பரீட்சகராகவும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் நிருவாக சபையிலும் (Executive Committee) ஆலோசனை சபையிலும் (Advisory Board) கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலும் அங்கத்தினராக வும் இருந்து வருகிருர்கள். சென்ற வருஷமுதல் சென்னைச் சருவகலாசாலையால் அங்கிகரிக்கப்பட்டு, இந்தச் சன்மார்க்க சபையால் நடத்தப்பட்டு வருகிற வித்துவான் வகுப்பு இவ்விடத்தில் ஏற்படுவதற்கு இவர் களுடைய முயற்சியே காரணமாகும்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஓர் அறிஞரால் அமைக் கப் பட்டுச் செட்டிநாட்டில் தமிழ்த்தொண்டு புரிந்து வரும் இச்சன்மார்க்க சபை தனது நன்றியைத் தெரி வித்துக் கொள்வது மிகவும் பொருத்தமானதேயாகும். நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் முறைகள் பலவற்

றில், உருவப்படம் ஒன்று தயாரித்து, பல அறிஞர்களை யும் அன்பர்களையும் அழைத்து அவர்கள் முன்னிலையில் அவ்வுருவப் படத்தைத் திறந்து வைக்கச் செய்தல் ஒரு சிறந்த முறையாகும். இவ்விழாவில் பண்டித மணியவர் களுடைய உருவப் படத்தைத் திறந்து வைக்கும் பெருமை எனக்கு அளிக்கப்பட்டதைப் பற்றி நான் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். இவ்வுருவப்படம் இச் சபைக்கு வரும் யாவர்க்கும் ஊக்கத்தையும், உழைப்பை யும், பரோபகாரத்தையும் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தும் ஓர் அடையாளமாக இருக்கும். தான் கற்றதைப் பிறர்க்குக் கற்பிக்கும் பெருந்தொண் டில் ஈடுபட்டுள்ள பண்டிதமணியவர்கள் அநேக வரு ஷங்கள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து, தாம் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கும் கல்வி ஸ்தாபனங்களுக்கும், சபைகளுக்கும், சங்கங்களுக்கும் பேருதவி புரிந்து கொண்டும், தமிழ்மொழிக்கும் சைவ சமயத்துக்கும் தமது அரிய தொண்டை இயற்றிக்கொண்டும் வருமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்."

* * *

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சியாளர் மகாவித்வான், பாஷாகவி சேகரர் **திரு. ரா. இராகவையங்காரவர்கள்** பேசியவை வருமாறு :—

"தானவீர சிகாமணியும் வேந்தர் பிரானுமான தலைவ ரவர்களே! நண்பர்களே! நான் சொல்லவேண்டுமென்று நினைத்தவைகளை யெல்லாம் தலைவரவர்கள் சொல்லி விட்டார் கள். மீண்டும் அவற்றையே நான் சொன்னால் அது கூறி யது கூறலாகும். இந்த மகாசபை பண்டித மணியின்

மீதுள்ள அன்பை, நன்றியைக் காட்டப் படத் திறப்பு விழாவை நடத்துகின்றது. தனவணிகர்களால் நடத்தப் படு கின்ற இந்தச் சங்கம், பண்டிதமணியின் பல்வகையான உப காரங்களேயும் பெற்றுத் திகழ்கின்றது. யான்காண அண் ணுமலே சர்வ கலாசாலேத் தமிழ்ப் பேராசிரியர் பதவியைத் திறமையாக நிருவகித்த பண்டிதமணியைப் பற்றி ராஜா அவர்கள் எவ்வளவு சொல்லவேண்டுமோ அவ்வளவும் சொன் ஞர்கள். சங்கத்தை நடத்துபவர், திறப்பாளர், திறக்கப் படுபவர் மூவரும் ஓரினத்தவர். இவ்வளவு ஒற்றுமை வேறெங்கும் நிகழ்வதேயில்லே. மூன்றும் மூன்று மாதிரி யாக இருந்ததைத் தான் நாம் பல விடங்களில் கண்டிருக்கி ரும். ராஜா அவர்கள், பலவேலேகளேயும் பொருட்படுத்தாது சிரமத்தையுங் கருதாது இங்குவந்திருக்கிருர்கள். அவர்கள் வரவால் இச்சங்கம் மேன்மையுற்றது. முற்காலத்தில் புல வர்களே அரசர்கள் எவ்வாறு போற்றிஞர்கள் என்பதை நீங் கள் அறிவீர்கள். வித்துவானேப் போற்றும் நன்மகனுக்கு எவ்வளவோ இலாபம் கிடைக்கிறது. "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவனேவா வானவூர்தி,யெய்துப வென்பதம் செய்விஃன முடித்து" என்ருர் பிறரும். அஃ தாவது, புலவர்களே ஆதரிப்பவர்களுக்கு நிச்சயமாகச் சொர்க்கம் உண்டு என்பதே. ஒரு புலவனேச் சிறப்பித்துப் படந் திறந்து வைப்பது மிகப் பெரிய காரியம்.

"வேந்தன் முடி சூடிஞன், பிராமணச் சிறுவ னுக்கு உபநயனம்" என்று சொல்லப் படுகிறது. உபநயனத்துக்குப் பிறகு பிராமணஞ அதற்கு முன்னே பிராமணஞ? முடிசூடிய பிறகு வேந்தஞ வேந்தன் முடிசூடு கிருஞ? இந்த விஞக்கள் எழுகின்றன அல்லவா? தகுதி யுள்ளவர்களுக்கே பதவிகள் கிட்டுகின்றன என்பது தான் இதற்குப் பொருள். அப்படியே பண்டிதமணி தகுதியாயிருக்

தார். தகுதியான ஒருவர் தகுதியான பதவியைப் பெற்ருர். பண்டிதமணி, பேராசிரியராக இருந்து செய்த காரியங்களை என்ஞல் என்றுமே மறக்க முடியாது. அவர்கள், பொரு ளுணர்ந்து சொல்லுதற்கு அரிய சேஞவரைய மென்னும் தொல்காப்பியச் சொல்லதிகார உரையை மிக எளிதாகப் போதித்ததை அடுத்த அறையிலிருந்து கேட்கும் பாக்கியத் தைப் பெற்றவன் நான். இங்கிலீஷ் படித்தவர்கள் தாம் அந்தப் பேராசிரியர் பதவியை வகிக்க வேண்டுமென்ற நியதி யைப் பண்டிதமணி மாற்றிவிட்டாரென்றே கூறவேண்டும்.

ராஜா அவர்கள் 82 புலவர்களுக்கு மாதம் பதினுயிரம் ரூபாய் வழங்குகிருர்கள். ஒரு கோடி செலவு செய்த பாஸ்கர சேதுபதிக்கும் இது தோன்றவில்லை. தனவணிகர்கள் பல கோடி செலவழித்தார்கள். யாருக்கும் இது தோன்றவில்லை. இவரது தந்தையார் தில்லையிற் பொன்னைப் பெய்தார். தமை யன் புனலைப் பெய்தார். இவர் மதியைப் பெய்தார். வளர்ந் தது சிற்றம்பலம். “நிதிபெய்த தந்தையினும் நீள்புனல்பெய் தமையனினும், மதிபெய்த நின்கொடையால் வளர்ந்தது சிற் றம்பலமே” என்பது யான் இவர்களைப் பாடிய ஒரு பாடலின் பகுதியாகும். வீரத்தால் ஏற்படும் வெற்றியால் அரசு பெற் ருேர் பலர். ஆஞல், கொடையிஞல் அரசு பெற்ருர் இவரே. இப்படி உலகத்துக்கு வழி காட்டியவர்கள் இவர்களே.

பண்டிதமணியவர்கள் இதுவரை பெற்றதைவிட இப் பொழுது பெறுவதே பெரிய கௌரவம். இங்கே யான் இயற்றியுள்ள பாட்டைக் கூறுகின்றேன்.

“வழிதிறந்தறம் வாழ்கெனக்கலை மன்றுதில்லையுள் வைத்துயிர்
விழிதிறந்தஅண் ணுமலைக்கொடை வேந்தர்மேதகை யின்பொருள்
மொழிதிறந்துபெய் புலவரிற்பெரு முதல்வன்பண்டித மணியுருக்
கிழிதிறந்தனன் மேலைநன்சிவ புரியவைக்கிசை கெழுமவே”

அகத்தியர் கடலைக் குடித்தாரென்றால் எல்லாப் பிராமணர்களும் தாங்கள் தாங்கள் தாம் குடித்ததாக எண்ணுகிறார்கள் என்று சங்கர பகவத் பாதர் கூறுகிறார். அந்த மாதிரி, பல்கலைக்கழகத்தை நிறுவியது நீங்கள் எல்லாரும் தான் என்று நினைக்க வேண்டும். கனம் ராஜா அவர்கள் பண்டிதமணியின் உருவப் படத்தைத் திறந்துவைக்க நேர்ந்த இந்நாள் நன்னாளாகும். எல்லோரும் நீடுவாழ்க.

*　　　*　　　*

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தலைவர் ராவ்சாஹிப் செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள் **திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள்** B.A., B.L. பேசியவை:-

வேந்தர் பெருந்தகையாகிய மாட்சிமை மிக்க தலைவரவர்களே, தமிழன்பர்களே ! நாடு முன்னேற, நலம்பெற இன்றியமையாத சாதனங்கள் இரண்டு.

“ தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு ”

நாடு நலம்பெறச் செல்வமும் அறிவும் அவசியம். இவற்றோடு அச்சாணிபோன்ற சிலரும் வேண்டும். தமிழ் நாட்டில் செல்வம் நிறைந்தது நகரத்தார் நன்னாடு. இவர்கள் பல ஆண்டுகளாக நற்பணிகள் பல புரிந்து வருகிறார்கள். தங்களுக்கு மட்டுமே எக்காரியத்தையும் செய்துகொள்ள இவர்கள் எண்ணினார்களில்லை.

ஓரரசர் உங்கள் சமூகத்தில் தோன்றினார். அரசரோடு பண்டிதமணியும் தோன்றியது தமிழ்நாடு செய்த தவப்பயனாகும். இதற்கு முன் வித்துவான்கள் பலர் இருந்தனர். இருந்தாலும் அவர்கள் புகழ்பெறவில்லை. பண்டிதமணியவர்கள் தோன்றியபோது எந்தவிதப் பல்கலைக்கழகமும் இல்லை. அந்தக் காலத்தில் இவர்கள் யாரிடமும் பாடங்கேட்டதாகத்

தெரியவில்லை. ஒருவேளை பண்டிதமணி தம் சரித்திரத்தைத் தாமே எழுதினால் அது தெரியும். பண்டிதமணி எவ்வித சாதனமுமின்றித் தமிழ்க் கற்றவர்கள். தம்மதியே தமிழை ஈட்டியது. இவர்களது விடாமுயற்சியை யென்னென்பது! நம்மால் செய்யமுடியாதபோது அஃது இல்லை, இஃது இல்லை; ஆகையினாலேயே அக்காரியம் முடிவுபெறவில்லையென்று பிறர் மீது பழியைச் சுமத்துகிறோம். ஆனால், பண்டிதமணி, தம்மாலேயே தாமுயர்ந்தார். தம்மதியினால் புகழையீட்ட முடியுமென்பதை உலகுக்குக் காட்டியவர் அவரே. நாங்க ளெல்லாம் கண்டு மகிழ அவர்களுடைய படம் இச்சங்கத்தில் இருக்கவேண்டியது மிக மிக அவசியம். பண்டிதமணி தமது வடமொழிப் பயிற்சியினால் வடமொழி நூல்களைத் தமிழ்ப் படுத்தினார்கள்.

"ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ் செல்வ முற்றக் கடை"

அவ்வாறன்றித் தாம் பெற்ற செல்வம் இந்த வையகமும் பெறவேண்டுமென்பது இவர்களின் அவா. "சுக்கிர நீதி"யைத் தமிழ்ப்படுத்தினார்கள். எனக்குத் தமிழ் தெரியும். ஆங்கிலமுந் தெரியும். ஆனால் மொழிபெயர்க்க முடியாது. என்னைப்போல மொழிபெயர்க்க முடியாமல் சிரமப் படும் வடமொழிப் புலவர் பலரை நான் கண்டிருக்கிறேன். அவர்கள் மொழிபெயர்ப்பைப் படித்தால் நம் பல் உடைந்து போகும். ஆனால் இவர்கள் மொழிபெயர்த்த "மண்ணியல் சிறுதேர்"ப் புத்தகத்தைப் படித்தால் எல்லையில்லாத சுவை தோன்றுகிறது. மூலத்திற்கூட அவ்வளவு சுவை இருக்க மாட்டாதென்று சொல்லலாம். இப்படி யாரும் செய்ய முடியாதென்பது உண்மை. இவர்கள், பழைய தமிழ் இலக் கியங்களாகிய கடவுள் மூழ்கிச் சிறந்த பொருள் நட்பங்க

ளாகிய அரிய மணிகளைக் கண்டெடுத்துப் பிறர்க்கு வழங்கும் வள்ளன்மையுடையார்.

பண்டிதமணியை எங்கு அழைத்தாலும் வருவார்கள். அரிய பிரசங்கம் செய்வார்கள். இவர்கள் சொற்பொழிவுகளால் தமிழுலகம் எய்திய பயன் பெரிதாம். அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் இவர்கள் தமிழ்ப் பேராசிரியராக இருந்து எவ்விதக் குறைபாடுமில்லாமல் தாம் மேற்கொண்ட கடமையை மிகத் திறமையாக நடத்திவந்திருக்கின்றனர். ஒரு மொழிக்குத் தலைவராக நியமிக்கப்படுகிறவர் அம்மொழியில் சிறந்தவராக இருக்கவேண்டும். தமிழ்ப் பேராசிரியர் பதவிக்குத் தமிழ்ப் பேராசிரியரைத் தானே நியமிக்க வேண்டும்? அப்படியில்லாமல் ஆங்கிலம் தெரியவேண்டும்; கொஞ்சம் தமிழ்த் தெரிந்தால் போதும் என்று நம்பிக்கையிருப்பது பெருந்தவருகும்.

யூனிவர்ஸிட்டி ஸிண்டிகேட்டில் தமிழ்த் தெரியாதவர்கள் அதிகம். தமிழே தெரியாதவர்கள் தமிழை எப்படி வளர்க்கமுடியும்? யூனிவர்ஸிட்டிகளிலுள்ள இன்னோன்ன குறைபாடுகள் நீக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியை வளர்க்கத் தமிழ்நாட்டில் பலர் இல்லை. வடநாட்டில் அநேகர் இருக்கின்றனர். தமிழர்கள் நல்லவர்களுக்கு ஆக்கந்தரத் தயங்குகிறுர்கள். தாயைப் போற்றுகிறுர்களில்லை. பிறமொழியில் பெருங்காதலுடையவராயிருக்கின்றனர். இந்த நிலையில் செட்டிநாட்டரசர் தமிழுக்கு ஆக்கம் தருவோமென்று முன்வந்தது மிகவும் பாராட்டத்தக்கது. இப்படி முன்வந்தவர்கள் இவர்கள்தான்.

புலவர்களுக்கும் நாட்டு மொழிக்கும் மதிப்புத் தராவிட்டால் கொற்றம் வீழ்ந்துவிடுமென்பது உண்மை. உலக சரித்திரத்தில் எந்த நாட்டை யெடுத்துக்கொண்டாலும்

புலவர் போற்றாத காலந்தொட்டே அரசுவீழ ஆரம்பித்த தென்பதைக் காணலாம். புலவர் திலகமாகிய பண்டித மணி யவர்களின் உருவப்படத்தைத் தாங்குமுகமாக இச்சபை தன்னைச் சிறப்பித்துக்கொண்டது போற்றத்தக்கதே.

* * *

காரைக்குடி "குமரன்" ஆசிரியர், **திரு. சொ. முருகப்பா அவர்கள்** பேசியவை:—

இன்றைய வைபவத்தில் யானும் சில வார்த்தைகள் பேசச் சந்தர்ப்பம் கிடைத்ததற்குச் சந்தோஷம். இம்மாதிரி விழா எத்தனை நடந்தாலும் சந்தோஷம்தான். பண்டிதர்கள், பண்டிதரைப் போற்றுதல் கஷ்டமான விஷயம். பொதுவாக யாரும் மேலேறுவதைக் கண்டு சகித்திருப்பதென்பது நம் நாட்டில் மிகவும் கஷ்டமான காரியம். ஒரு புலவரைப் பலரும் பாராட்ட முற்பட்டிருப்பது தேச உத்தாரணத்தின் அறிகுறி யென்றே சொல்லவேண்டும். இருபத்தைந்து வருடங் களுக்கு முன்பு தமிழ்ப் படிக்க இடமில்லை. கீழ்வாய் இலக் கத்துக்குமேல் படிக்கச் சொன்னால் பிள்ளையைக் கெடுக்கிறா னென்று பலர் கூறினர். படித்தால் கோவிலூர் மடத்துக்கோ அல்லது சாமியாராகவோ போய்விடுவானென்று பயந்தார் கள். படிப்பவன், தொழிலுக்கும் உலக வாழ்க்கைக்கும் உபயோகப்படமாட்டானென்பது கருத்தாக இருந்தது. அந்த நாளில் நமது பண்டிதமணி படித்து மேல்ஏறியது எப்படி யென்பது அவர்களுக்கே ஆச்சரியமாக இருக்கக் கூடும். அவர்கள் தம் சரித்திரத்தைத் தாமே யெழுதினால் தான் அறியமுடியுமென்று நண்பர் உமாமகேசுவரம் பிள்ளை யவர்கள் சொன்னார்கள். அங்ஙனம் எழுதுங்கால் இக்காலத் துப் பிறர் எழுதுவதுபோல் மிக நீளமாக எழுதாமல் கொஞ் சம் சுருக்கமாக எழுதுதல் நலமாகும்.

இவர்கள் விஷயங்களை யெடுத்துக் கூறுவதில் திறமை பெற்றவர்கள். இவர்களுடைய எழுத்தின் நயத்தைக் கண்டு மகிழ்ச்சியடைவேன். பேசும் திறனைக்கண்டு வியப்படைவதும், கருத்துக்களின் நுட்பங்களை விளக்கிக் கூறுவதில் யான் இன்புறுவதும் உண்டு.

படித்த பண்டிதர் பலருண்டு. நூல்களையெல்லாம் படித்திருப்பார்கள். கடபாடம் செய்திருப்பார்கள். பொருள் நுட்பங் கூறும் சக்தியேற்படுவதில்லை. பண்டிதமணியவர்கள் சிறந்த படிப்பாளி. படிக்கும்பொழுதே அவர்களுடைய கூரிய புத்தியினல் நுண்ணிய பொருள்களைக் கண்டு கொள்கிருர்கள். அதனைப் பிறர் அரிய எழுதுகிருர்கள். படித்தவரும் படியாதவரும் நன்ருக உணர்ந்து இன்புறுமாறு எடுத்து விளக்கிச் சொல்லுந் திறன் நன்கு அவர்கட்கு வாய்ந்திருக்கிறது. படிப்பு, நுண்ணறிவு, வெளிப்படுத்தி எழுதுந் திறன், விளக்கிப் பிறர் மனத்தில் பதியும்படி பேசுந்திறன், இத்தனையும் ஒருவருக்கு வாய்ப்பதென்பது பேராச்சரியமான விஷயமாகும். இவர்கட்கு நிகரான பண்டிதர் பலரில்லை. புத்தகத்தின் பெயர் தெரியாதவர்க்கும் எளிதாகப் பொருள் விளங்கும்படி இவர்கள் பேச்சும் எழுத்தும் இருக்கின்றன. இத்தனையும் வாய்த்த பண்டிதமணியவர்களைப் பெற்றிருப்பதற்குத் தமிழ்நாடு முழுமையும் போற்றிப் படம் வைத்துப் பயன் பெறவேண்டியது அவசியமாகும்.

சங்கம் என்ருல் வேலையில்லாதவர்கள் கூடும் இடமென்று கருதப்பட்ட அந்தக் காலத்தில், சங்கங்களால் பலன் காண முடியுமென்பதைக் காட்டினது இந்தச் சபை. இந்த நாட்டுக்குப் புலவர்களைக் கொண்டுவந்ததும் இதுதான். அப்பொழுது புலவர்களை இங்கே தான் காணவேண்டும். சன்மார்க்க சபைக்குவரக் கன்மார்க்கத்தைக் கடந்து தான் வரவேண்டும். அப்படியே ஒரு புலவர் பாட்டும் பாடினர்.

அப்பொழுது கட்டுச்சோறு கட்டிக்கொண்டு காலையில் புறப்பட்டு மாலையில் மாட்டு வண்டியில் இங்கேவந்து சேர்வோம். இந்தச் சங்கத்தைப் பழநியப்ப செட்டியார் தமது பிள்ளையைப்போல் வளர்த்தார்கள். அவர்களுக்குப் பின் அண்ணுமலைச் செட்டியாரவர்கள் சபையை வளர்த்தார்கள். இப்பொழுது அவர்களுடைய குமாரர்கள் தங்கள் கண்களைப் போலச் சங்கத்தை வளர்க்கிறார்கள். புலவர்களை யெல்லாம் இந்தச் சங்கம் அரங்கேற்றியது. இந்தச் சங்கத்திற்கு வராத புலவர்களேயில்லை. இப்படிப்பட்ட சங்கம் தோன்றக் காரணமாயிருந்தவர்கள் பண்டிதமணி. தமிழ்ப் புலவர்களைக் காட்டியவர்கள் பண்டிதமணியும் இந்தச் சங்கமுமேயென்று சொல்லலாம்.

சங்கங்கள் பல இருக்கின்றன. அவைகளில் சில விசேட காலத்தில்தான் திறக்கப்படும். பிறகு மூடப்பட்டு விடும். பல சங்கங்கள் சில மாதமும் சில வருஷமுந்தான் நடைபெற முடிகிறது. ஆனால் இந்தச் சங்கம் முப்பது வருஷங்களாகத் திறந்தே வைக்கப்பட்டிருக்கிறது. சண்டையில்லை. சச்சரவில்லை. நல்லவர்கள் உள்ளன்போடு செய்கிறதொண்டு. பண்டிதமணி யவர்களின் பூரண அபிமானத்தைப் பெற்றது இந்தச் சங்கம். இதைச் சேர்ந்த கலாசாலை நாளுக்குநாள் வளர்ந்து இன்று ஒரு காலேஜாக உருக்கொண்டிருக்கிறது.

இந்தச் சங்கத்தில் இவர்களுடைய படம் இருப்பது பெருத்த விசேஷம். வருகிறவர்கள் போகிறவர்கள் யாவரும் இதைப் பார்ப்பார்கள். இவர்களைப் பின்பற்ற வேண்டுமென்கிற எண்ணம் அவர்களுக்கும் இங்குள்ள மாணவர்களுக்கும் தோன்றும். அப்பொழுது ஒவ்வொருவர்க்கும் இவர்களுடைய சரித்திரம் சொல்லியாகவேண்டும். சரித்திரம் சொல்லப்படும்போது மாணவனைப் பார்த்து நீயும் இவர்களைப்போல் ஆகுக என்று சொல்வது போலிருக்கும்.

உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் படம் திறக்கப்படுவதில்லை. இப்பொழுது உலகிலுள்ள இருநூறுகோடி மக்களும் நூறு வருடத்துக்கு ஒரு முறை மாற்றப்பட்டு விடுகிறார்கள். இவர்கள் அனைவருக்கும் படம்வைக்க யாரும் முற்படுவதில்லை. பண்டிதமணியவர்களுக்குப் படம் வைக்கத் தகுதியிருக்கிறது. தகுதியறிந்து இங்கே படம் வைக்கப் பெறுகிறது. தகுதி வாய்ந்த இவர்களின் படத்தைத் திறந்துவைக்கத் தகுதி வாய்ந்த ராஜா ஸர் அவர்கள் ஒப்புக்கொண்டது பெரிய காரியம். பண்டிதமணியவர்கள் பாஷைக்கு ஆணி. அதேமாதிரி ராஜா அவர்கள் இந்த நாட்டுக்கு ஆணி. அந்தக் காலத்தில் செட்டியார்களைப் பற்றி என்ன பேசப்பட்டதென்பது உங்களுக்குத் தெரியும். "தொலைக்குச் செல்லுவார்கள்; சம்பாதிப்பார்கள்; கோவில் கட்டுவார்கள்" இவை தாம் செட்டியார்களைப் பற்றிப் பிறர் எண்ணி வந்தவை. ஆனால் செட்டியார்கள் கோடிக் கணக்காகச் செலவழிப்பார்களென்பதை ராஜா அவர்களே நிரூபித்தவர்கள். கல்வியென்பது உள்ளளவும் இவர்கள் பெயர் நிலைத்து நிற்கும். என்றென்றும் பாராட்டத்தக்க காரியத்தைச் செய்தார்கள். அவர்களால் பண்டிதமணியவர்கள் பாராட்டப் படுவது குறிப்பிடத் தகுந்த விஷயம்.

பண்டிதமணியவர்கள் தமிழ்ப் பேராசிரியராயிருந்தது தமிழில் ஒரு புரட்சியென்று சொல்லவேண்டும். ஏனெனில், தமிழ் மட்டுங் கற்றவர்கள் இதுவரை தமிழ்ப் பேராசிரியராக இருந்ததில்லை. தமிழை ஒதுக்கித்தள்ளத் தமிழ் நாட்டில் ஆளதிகம். தமிழ் நாட்டிற் பிறந்து, தமிழ் நாட்டுத் தண்ணீரைக் குடித்து, தமிழ் நாட்டில் வளர்ந்து இங்கேயே மடியும் தமிழன் தமிழைத் தள்ளுகிறான்; கேவலப் படுத்துகிறான். இது வருந்தத்தக்கது. இப்படிப்பட்ட இன்னல்

களுக்கு இடையே தமிழுக்கு இவர்கள் செய்துவரும் தொண்டு அளப்பரியது.

இவர்கள் சம்ஸ்கிருதத்திலும் பாண்டித்தியம் உடையவர்கள். இது பெருமைப்படத்தக்க விஷயம். அந்தப் பாஷைக்கு உரியவர்கள் என்று கருதப்படுகிற பிராமணர்கள், தமிழன் வாயில் அந்தப் பாஷை நுழையாது என்று சொன்னார்கள். மற்றைய வகுப்பார் படிக்கவே கூடாதென்றார்கள். படித்தாலும் பிழையாகத்தான் உச்சரிக்கமுடியுமென்றார்கள். பண்டிதமணியினிடம் இத்தகைய குறைபாடுகளெல்லாம் இல்லையென்று கூற விரும்புகிறேன். எனக்குச் சம்ஸ்கிருதம் தெரியாது. குறைகளில்லை என்று நிச்சயமாகச் சொல்லுகிறேனே எப்படி? குறைகளிருந்தால் அதற்குரியவர்கள் இலேசில் விடுவார்களா? பண்டிதமணியின் சம்ஸ்கிருத உச்சரிப்பில் சந்தேகங் கூறினவர் கிடையாது. எல்லோரும் பாராட்டியிருக்கிறார்கள். இதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். தமிழனுக்கும் சம்ஸ்கிருதம் வரும்; உச்சரிப்புப் பஞ்சம் ஏற்படாது என்பதைப் பண்டிதமணி நிலைநிறுத்தினார். பண்டிதமணி யவர்களும், ஸ்தாபிப்பவர்களும், திறந்துவைத்த ராஜா அவர்களும் நீண்ட ஆயுள் திடகாத்திரத்துடன் வாழ விரும்புகிறேன்.

* * *

வலம்புரி, திரு. வ. ராம. இலக்குமணச் செட்டியார் அவர்கள், M. L. C. பேசியவை:—

நம் நாட்டில் இருகண் போன்றார் உளர் என்பதை இவ்விழாக் காட்டுகிறது. கல்வியும் பொருளும் பெற்றவர்கள் தனவணிகர்கள். நம் சமூகம் செய்த தவப்பயன் இரண்டும் அமைந்திருக்கின்றன. தலைவராகிய ராஜா அவர்கள், பண்டிதமணியவர்களைத் தமிழ்ப் பேராசிரியராக நியமித்தது நம்

சமூகத்திற்கு இன்னும் பெருமையை அளித்தது. தமிழ் வளர ராஜா ஸர் அவர்கள் பல்கலைக் கழகம் நிறுவியுள்ளது என்றென்றும் பாராட்டத்தக்கது. இந்தச் சங்கம் வளரப் பண்டிதமணி செய்த தொண்டு மறக்கமுடியாதது. பண்டித மணி யவர்களைப் புலவர்களெல்லாரும் பொதுவாகப் பாராட்டி மகிழ்வரெனினும், எனக்கு வயிரவன் கோயிற் பெரிய வகுப்பு என்னும் ஞாதியுரிமைபற்றிச் சிறப்புவகையிற் பாராட்டி மகிழும் பேறு உண்டு என்பதை இங்கே புலப் படுத்திக்கொள்ளுகின்றேன்.

* * *

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆசிரியர் பண்டிதர் - திரு. **லெ. ப. கரு. இராமநாதன் செட்டியா** ரவர்கள் பேசியவை:—

பிறர் மனத்தில் நினைக்கவும் ஒண்ணாத பேரறம் செய்த வர்களும், பெருஞ் செல்வரும், எண்ணிய எண்ணியாங்கு முடிக்கும் ஆற்றலுடையவர்களும், குலப் பெருமையை நிலை நிறுத்தியவர்களுமான கனம் செட்டிநாட்டு ராஜா அவர்கள், இச் சன்மார்க்க சபையில், நம் பண்டிதமணியவர்கள் உருவப் படத்தைத் திறந்துவைத்தது மிகவும் போற்றுதற் குரிய தாகும்.

யான், பண்டிதமணியவர்கள் பெருமையை நெடுநாளாக அறிந்திருந்தாலும், சுமார் ஆறு வருடங்களாக நெருங்கிப் பழகி அவர்கள் கல்வித்திறனை அறியும் பேறு பெற்றுவரு கின்றேன். உலகில் பலவகைப்பட்ட புலவர்கள் இருக்கின் றார்கள். இலக்கணந் தெரிந்திருந்தால் இலக்கியம் தெரியா திருப்பர். இரண்டுந் தெரிந்திருந்தால் சொற்பொழிவியற்றத் தெரியாமல் இருப்பார்கள். சிலர் உரைநடை யெழுத அறி யார். சிலருக்குச் செய்யுள் இயற்றல் இயலாது. இவ்வாறு

குறையுள்ளவர்களாகவே யிருப்பார்கள். நம் பண்டிதமணி யவர்கள் அப்படியில்லாமல், இலக்கணம், இலக்கியம், சொற் பொழி வியற்றுதல், உரைநடை யெழுதுதல், செய்யுள் இயற்று தல் முதலிய எல்லாத் துறைகளினும் தலைசிறந்து விளங்கு கிறார்கள்.

இப்பொழுதுள்ள இலக்கண நூல்களுள் தலைமையான தும் மிகக் கடுமையானதுமான தொல்காப்பியச் சொல்லதி காரச் சேனாவரையர் உரையை, இலக்கிய பாடங் கேட்பது போல மாணவர் விரும்பிக் கேட்குமாறு எளிதாக அவர்கள் மனத்திற் பதியும்படி இவர்கள் பாடஞ் சொல்லும் திறனை மாணவர்கள் என்னிடம் அடிக்கடி புகழ்ந்து கூறுவதுண்டு. நான் அவர்களிடம் அது வியப்பன்று; பண்டிதமணியவர் கட்கு இயல்பு. மிதிலையில் சிலர் இராமனையும் இலக்குவனையும் பாராட்டினர்; சிலர், இவ்விருவரையும் இங்கே அழைத்து வந்த முனிவனை வணங்குங்கள். ("இம்பர் இங்கரிற் றந்த முனிவனை யிறைஞ்சுமென்பார்") என்று சொன்னார்கள். அதுபோலப் பண்டிதமணியவர்களை இப்பல்கலைக் கழகத் துக்கு அழைத்து உதவிய ராஜா அவர்களைத்தான் பாராட்ட வேண்டும் என்று சொல்லுவதுண்டு.

இப்பொழுதுள்ள சிறந்த சங்கங்களில் பண்டிதமணி யவர்கள் தலைமையைப் பெறாத சங்கம் இல்லையென்று சொல்லலாம். சென்னையில் சைவ சித்தாந்த மகா சமாஜத் தின் வெள்ளி விழாவிலும், தூத்துக்குடியில் சைவ சித்தாந்த சபையின் பொன் விழாவிலும் தலைவராயிருந்து சிறப்புற நடத்தியுள்ளார்கள். வைர விழா நடைபெறும் சங்கம் உண்டாயின் அப்பொழுதும் இவர்களே தலைமை வகிப்பார்க ளென்று நம்புகிறேன்.

மதுரை, இராமேசுவரம் தேவஸ்தானத்துச் சம்ஸ்கிருத பாடசாலைப் பிரின்சிபால் அவர்கள், இவர்களுடைய "மண்ணியல் சிறுதேர்"க்கு எழுதிய மதிப்புரையில், "வடமொழியில் தெளிவு குன்றிக்கிடக்கும் சில இடங்களில் இத் தமிழ் நூல் தெளிவு மலிந்து காணப்படுகின்றது. இவற்றால் இது முதனூலினும் மேம்பாடுடையதாகக் கருதற்பாலது" என்று குறிப்பிட்டிருக்கிறார். இதிலிருந்தே இவர்களுடைய இரு மொழிப் புலமை நன்கு விளங்கும்.

எனக்குமுன் பேசியவர்கள், இவர்கள் பல்கலைக் கழகங்களிற் பெற்ற ஸ்தானங்களைச் சொன்னார்கள். அவற்றோடு சமீபத்தில் இவர்கள் M. O. L. பரீட்சகர் போர்டில் மெம்பராகச் சென்னை யூனிவர்ஸிட்டியாரால் நியமிக்கப்பெற்றிருப்பதையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். இவைமட்டுமல்ல. இன்னும் எத்தனை வேலைகள் வந்தாலும் சிறிதும் சோம்பலில்லாமலும் பிறர் உதவியில்லாமலும் பார்க்கும் ஆற்றலுடையவர்கள் என்பது நான் உடனிருந்து கண்ட விஷயமாகும். நம் ராஜா அவர்களுக்கும் சோம்பலென்பது எவ்வாறிருக்குமென்று தெரியாது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வருடந்தோறும் ராஜா அவர்களுடைய பிறந்தநாட் கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடைபெறுவதும், அப்பொழுது பல மொழிகளில் புலவர்கள் ராஜா அவர்களை வாழ்த்திப் பாடுவதும் உண்டு. அவ்விழாவில் வருடந்தோறும் பண்டிதமணியவர்கள் பாடிய பாடல்கள் மணிகள் போலப் போற்றத் தக்கனவாகும். அவையும், அவர்கள் பாடிய பிற பாடல்களும் தனிப்பாடல் திரட்டாகத் தொகுக்கத் தக்கனவாகும். ராஜா அவர்களும் பண்டிதமணியவர்களும் சன்மார்க்க சபையும் நீடுவாழ்க.

பின்னர், **பண்டிதமணியவர்கள்** நன்றிகூறுமுகமாகக் குறிப்பிட்டவை :—

என் சிறு தொண்டுக்கு உருவப்படம் அமைப்பது சபைக்கு என்மீதுள்ள அன்பைக் காட்டுகின்றது. எனக்கு இவ்வளவு சிறப்புச்செய்த அளவு யான் சங்கத்துக்குத் தொண்டு செய்ததாக என் நினைவுக்கு வரவில்லை. யான் படித்தது எங்கே எங்கேயென்று பல அன்பர்கள் கேட்டார்கள். இங்கேதான். யான்தான் இந்தச் சங்கத்தின் முதல் மாணாக்கன். சன்மார்க்க சபையினால்தான் எனக்கு மேன்மையேற்பட்டது. பொருட்பயனை எதிர்பார்த்து யான் கல்வி கற்கவில்லை. சொற்பொருட் சுவைகளை விரும்பிக் கற்றேன். இப்பொழுது பல்லாற்றானும் பெரிதும் பயன்படுகின்றது. என் சிறுமையை யான் அறிவேன். ஆனால், யான் உயர்ந்தவனென்று பிறர் உணரும்படி செய்த பெருமை கனம் ராஜா அவர்களைச் சார்ந்தது. நிகரற்ற செல்வமும், அறிவும், ஆட்சித்திறனும் அமைந்த பெருங்கோடை வள்ளலாகிய கனம் செட்டிநாட்டு ராஜா அவர்கள் தம் உள்ளத்தில் எனக்கும் ஓர் இடனளித்துச் சிறப்பித்து வரும் பெருமையே, யான் அடைந்து வரும் சிறப்புக்கள் எல்லாவற்றினும் தலைசிறந்ததாகும்.

படத்திறப்பன்று படத்திற்கு உரியவர் வரலாகாது. வந்தாலும் பேசலாகாது என்பது மேனாட்டார் வரம்பு. ஆனால் யான் இரண்டையும் மீறி நடக்கின்றேன். யான் பேச எண்ணியது ஒரு விஷயம். இந்தச் சங்கம் ராஜா அவர்களை வரவழைத்துத் தன்னை அலங்கரித்துக் கொள்ள எண்ணியது. அதற்கு என் படம் ஒரு கருவியாய் அமைந்தது. இதுவே எனக்கு மகிழ்ச்சி தருவது. இதனை அறிவித்துக்கொள்ளவே யானும் எழுந்து பேசலானேன். என்னைப் பாராட்டிப் பேசிய அன்பர்களுக்கு என் நன்றி உரித்தாகுக.

மகாவித்துவான் இராகவையங்காரவர்கள் பல ஆண்டு களாக என்பால் அன்பும், என் சிறு கல்வியில் மதிப்பும் உடையவர்கள். அவர்கள் வாழ்த்து எனக்குப் பல்லாற்றானும் நன்மை பயந்து வருவது ஒன்று. திருவாளர் உமாமகேசு வரம் பிள்ளையவர்கள் என்னிடத்துப் பேரன்பு உடையவர் கள். இன்று அன்பின் முடிந்த எல்லையில் நின்று அதன் வயப்பட்டுப் பேசினார்களென்றே கூறவேண்டும். திரு. முரு கப்பா அவர்கள் என்பால் இவ்வளவு கௌரவம் வைத்திருப் பதை யான் இன்றுதான் உணர்ந்தேன். அவர்கள் என்னைப் பாராட்டுமுகமாக ஒரு திறமையான கல்வியாளன் எப்படி யிருத்தல் வேண்டுமென்பதை நன்கு எடுத்துக் காட்டினார் கள். திரு. இலக்குமணச் செட்டியாரவர்கள் என்னின் வேறல்லர். இதனை அவர்களே வெளிப்படுத்தினர். பண்டிதர் இராமநாதன் செட்டியார் இளமைப் பருவத்தே தமிழ்த் துறையில் நன்கு பயின்றவர்; என்னுடன் ஒருங்கிருந்து தமிழ் வளர்ச்சியில் உழைத்து வருபவர்; என்பால் உண்மை யன்புடையார். எல்லாம் அன்புமயமாகப் பேசப்பட்டனவே. யான் பாராட்டப் பெற்றதற்கு என்னுடைய ஆற்றலைவிட எனது நல்லூழ் முக்கிய காரணமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதன் பின், பண்டிதமணியவர்களையும், கனம் ராஜா அவர்களையும், சபையையும், பாராட்டிப் பல பெரியோர் கடி தங்களும் தந்திகளும் அனுப்பியிருந்தனர். அவை சபையிற் படிக்கப்பெற்றன. கடிதம் தந்தி அனுப்பினோர் பெயர்களும், அவர்கள் கடிதங்களிற் குறிக்கப்பட்ட சில முக்கியமான செய்திகளின் சுருக்கமும் அடியிற் குறிக்கப்பெறும்.

விழா ஆரம்பிப்பதற்கு முன்னும் இடையிலும் வலம் புரி திரு. வயி. வ. வடுகநாதன் செட்டியாரவர்கள் புதல்விய ரான திருவளர் செல்விகள் நாச்சம்மை, மீனாட்சி ஆகிய

சகோதரிகளின் சங்கீதக் கச்சேரி நடந்தது. பக்கவாத்தியங்களுடன் இனிய இசையில் அப்பெண்மணிகள் பாடிய கீர்த்தனங்களும் பாடல்களும் சபையார்க்குப் பெரிதும் நல்விருந்தாயின.

முடிவில், திரு. அ. சாமிநாதன் செட்டியார் அவர்கள் சபைப் பிரதிநிதியாக எழுந்து, தலைமையேற்றுச் சிறப்பித்த கனம் ராஜா அவர்களுக்கும், பாராட்டுரை நிகழ்த்திய பெரியோர்களுக்கும், சபைக்கு வந்து கேட்டு இன்புற்றுச் சிறப்பித்த சபையார்க்கும் வந்தனம் கூறினர். பண்டிதமணியாரின் உருவப் படத்தைத் தம் செலவில் சித்தம் செய்து சபைக்கு உபகரித்த நற்சாந்துபட்டி அன்பர், திரு. பெ. ராம. ராம. சிதம்பரஞ் செட்டியாரவர்களின் உதவி பாராட்டப்பெற்று, அவர்களுக்கும் வந்தனம் கூறப்பெற்றது. தமிழ் வாழ்த்து, கடவுள் வாழ்த்துடன் விழா இனிது நிறைவேறியது.

கடிதம் அனுப்பியவர்கள்

1. ஸ்ரீமத் சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அவர்கள்.
2. மகாமகோபாத்யாய, டாக்டர் வே. சாமிநாதையரவர்கள்.
3. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A. M.L.
4. S. சோமசுந்தர பாரதியாரவர்கள், M.A. B.L.
5. "ராவ்சாஹிப்" வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள், G.B. V.C.
6. பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்.
7. S. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள், B.A. L.T.

8. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள், B.A.
9. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள், B.A.B.L.
10. "ராவ்சாஹிப்" C.S. சீநிவாசாச்சாரியாரவர்கள், M.A.
11. J. T. சதாசிவ ஐயரவர்கள் கல்வித்தலைவர், கண்டி.
12. "பெருஞ்சொல்விளக்கனார்" அ. மு. சரவண முதலியாரவர்கள்.
13. அ. சிதம்பரநாதன் செட்டியாரவர்கள், M.A.
14. P. ஆலாலசுந்தரம் அவர்கள், M.A.
15. S. உருத்திரபதி அவர்கள், M.A.
16. C. R. மயிலேறு அவர்கள், B.A. (Hons).
17. சு. நல்லசிவன் பிள்ளையவர்கள், தமிழாசிரியர்.
18. கரு. முத்து. தியாகராஜச் செட்டியாரவர்கள்.
19. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள், "சித்தாந்த ஆசிரியர்"
20. "பாலகவி" வே. இராமநாதன் செட்டியாரவர்கள்.
21. பாகனேரி, தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்க அமைச்சர்.
22. நாட்டரசன் கோட்டை - பாரதி இலவச வாசக சாலையார்.
23. புதுவயல் சரஸ்வதி சங்க அமைச்சர்.
24. இலக்குமிபுரம், சொக்கலிங்க வித்தியாசாலைத் தலைவர்.
25. *தமிழ்ப்பண்டிதர், ப. சிங்காரவேற் பிள்ளையவர்கள்.
26. சு. வீர. கதிரேசன் செட்டியாரவர்கள்.
27. பிச்சப்பா சுப்பிரமணியன் அவர்கள்.

---

*இவர்கள் அனுப்பிய "இயன்மொழி வாழ்த்து" இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளது.

28. K. இராமநாதன் செட்டியாரவர்கள், B.A. B.L.
29. L.K.கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள், B.A.B.L.
30. நவநீதகிருஷ்ணன் அவர்கள், M.A.
31. மு. கிருஷ்ணசர்மா அவர்கள், தமிழ் வித்வான்.
32. வித்துவான், S. இராதாகிருஷ்ணன் அவர்கள்.
33. தி. இராமலிங்க முதலியாரவர்கள், B.A. L.T.

தந்தி அனுப்பியவர்கள்

1. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் திருப்பனந்தாள் ஆதீனம்.

2. சி. ராம. மு. லெ. இலக்குமணச் செட்டியாரவர்கள், காசிநாதன் செட்டியாரவர்கள்.

3. வித்வான், நயினர் முகம்மது அவர்கள்.

வாழ்த்துக் கடிதங்களிற் கண்ட சில குறிப்புக்கள்

1. "தற்போது உள்ள புலவர்களுள் சிறந்து விளங்கும் பண்டிதமணியின் திருவுருவப் படத்தை இருத்த எண்ணியதும், இருத்துவதும் மிக நல்லவை."

"செந்தமிழ் வளர்ப்பாரும் செல்வநிறைந்தாரும் ஆகிய
அரசரைக் கொண்டு திறக்கச் செய்வது மிகத்தக்கதே"

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்

* * *

2. பண்டிதமணி அவர்களின் திருவுருவப்படம் தங்கள் சபையில் திறந்து வைக்கப்பெறும் நற்செய்தியை அறிந்து பெருமகிழ்ச்சி யடைந்தேன். வடநூற்கடலுந் தென்னூற்கடலும் நிலைகண்டுணர்ந்து, நூல் நுட்பங் காண

பதில் இணையற்ற கூர்மை வாய்க்கப்பெற்று, விழுமிய நூல் பல இயற்றியும், இனிய கட்டுரைகள் பல எழுதியும், நுண்ணிய சொற்பொழிவுகள் பல ஆற்றியும், உயர்தர மாண வர்க்குத் திட்பமிக்க கல்வி பயிற்றியும், தமிழ் வாணர் பலரை யுந் தாய்போற் பேணியும் பன்னுளாகத் தமிழ் நாட்டிற்குப் பேருதவி புரிந்துவரும் தமிழ்ப்பேராசிரியராகிய கல்விப் பெருந்தலைவர் படத்தை, கல்வி நலன் உணர்ந்து, தமிழ் அன்னைக்குப் பல்கலைப் பெருமாடம் நிறுவிப் போற்றுஞ் செல்வப் பெருந்தலைவராகிய செட்டிநாட்டரசரவர்கள் திறந்து வைத்தல் மிகவும் பொருத்தமான அரும்பணியாகும். அத் திருவிழாச் சிறப்பில் என் உள்ளங் கலந்து உவகையுறும். எனது புறவுருவம் கலந்துகொள்ள இயலாமையை மன் னிக்கவும்.''

கா. சுப்பிரமணியன்

* * *

3. ''இனித் தங்கள் சபையில் இருபெரு மொழிகள் தருநல மனைத்தும் உண்டு தேக்கி, உலகத்தோடொட்ட வொழுகும் ஒப்புரவாண்மை ஒப்புயர்வற்ற வென்றியும் வீறு முதவ, அறிவு நிறை ஓர்ப்புக்கடைப்பிடி நான்கும் செறிவுறு செவ்வியாற் சிறந்த பண்டிதமணியவர்களின் இடையறுத் துணை நலம் பாராட்டி, அவர்கள் திருவுருவப் படம் திறக் கும் பெருவிழாவும் இவ்வாண்டில் உடன்நடத்தும் பெற்றி சாலச் சிறப்புடைத்து.''

''எண்ணிய எண்ணியாங் கெய்தும் திண்ணிய திற லனைத்தும் ஒருங்குபடைத்துப் புண்ணியப் பெரும்புகழ் நண்ணிய......திரு செட்டிநாட்டு மன்னவரவர்கள், அப்பெரி யார் படந்திறக்க உடன்பட்ட பான்மை ஒன்றே அப்பெரி யார் பெருமைக்குப் போதிய சான்றாகும்.''

S. S. பாரதி

4. "சன்மார்க்க சபைக்கு உயிர்நாடி போன்றிருந்து பல்லாற்ருனும் நலம்புரிந்து அதனைப் பெருமையுறச் செய்து வரும் பண்டிதமணியவர்கள் உருவப் படத்தினை அதன்கண் திறந்து வைப்பதும், கனம் தங்கிய ராஜா சர் செட்டியாரவர்களால் அது நிகழ்த்தப் பெறுவதும் மிக்க பொருத்தமும், பலருக்கும் மகிழ்ச்சி விளைப்பதும் ஆகும்."

நா. மு. வேங்கடசாமி.

* * *

5. "தமிழுலகிற்கோர் கண்மணியென இலகும் நம் பண்டிதமணி யவர்களுடைய நுண்மாண் நுழை புலமும், யாவரும் வியந்து இன்புறத்தக்க சொல்வன்மையும், அழகுற எழுதும் ஆற்றலும் தமிழறிந்தோர் அனைவராலும் உவப்புடன் பாராட்டப்பட்டு வருவன."

சு. சச்சிதானந்தம் பிள்ளை.

* * *

6. "இந்த உருவப்படம் சபையிற் கல்வி பயிலும் மாணவர்கட்குச் சிறந்த ஊக்கத்தை யளிக்குமென்று நம்புகிறேன்."

ம. பாலசுப்பிரமணியன்.

* * *

7. To

The Secretary,
THE SANMARGA SABHA,
Mela Sivapuri, Pudukottah State.

Dear Sir,

It gives me very great pleasure to associate myself with the function arranged in honour of Professor Pandithamani M. Kadiresan Chettiar Avl., under the auspices of your Sabha. A great scholar of deep erudition with a flair for flluent

expression, the Pandithamani has earned a name of honour and great respect for himself in the world of South Indian Scholarship; his sweet temper and obliging disposition have made him a most useful member of the University community and a loved and revered figure. It is but fitting that his ripe scholarship which is nearly four decades old and which transcends Tamil language and literature and has made him an eminent scholar in Sanskrit also should be thus honoured by an institute of Tamil culture like yours and by the Rajah Sahib of Chettinad, who is the most active symbol of the greatness to which a Tamilian can attain. I wish the function every success.

I remain,
Dear Sir,
Yours Sincerely,
C. S. SRINIVASACHARI,
(*Professor of the History, Annamalai University*)

* * *

8. "பண்டித மணியவர்களது அருமையும் பெருமையும் தமிழ் நாடெங்கும் நன்கு அறியப்பட்டிருக்கும் விஷயம். அவர்கள் என்னுடைய அழைப்பைப் பொருட்படுத்தி முன்பு யாழ்ப்பாணம் வந்து எங்களுக்குக் காட்சி தந்தருளினார்கள். தமிழகத்தின் ஒரு கூறாகிய ஈழத்துத் தமிழ் மக்களது மனத்தைக் கொள்ளைகொண்டு போனார்கள். அவர்களது கல்வியது பெருக்கத்தையும் சொல்வன்மையையும் குணப் பண்பையும் பற்றி இவ்விடத்து மக்கள் வியந்து பாராட்டிப் பேசுவர்."

தி. சதாசிவ ஐயர்,
Inspector of Schools, Jaffna.

9. "பண்டு, நம் தமிழ்மொழி மிகச் சிறந்து விளங்கியதற்குக் காரணம், புலவர் பெருமக்களை முடியுடை மன்னரும், குறுநில மன்னரும், பெருநிலக் கிழவரும் எல்லா வகையாலும் போற்றி வந்தது தான் என்பது சங்க இலக்கியங்களால் அறியப்படுவதொன்று. நமது அருமைக் கவியரசாகிய பண்டிதமணியவர்களின் படத்தை, புவியரசாகிய சர் ராஜா அவர்கள் திறந்து வைப்பது, நம் தாய்மொழி மீட்டும் தன் சிறந்த நிலையை அடையப் போவதைக் காட்டும் அறிகுறியேயென நினைந்து நினைந்து மகிழ்கின்றேன்.

நமது பண்டிதமணியவர்களின் படத்தை 'உருவப் படம்' என்று சொல்வதைவிட 'அறிவுப் படம்' எனக் கூறுதலே சாலவும் பொருத்தமா யிருக்குமென்பது எனது தாழ்மையான கருத்து."

அ. மு. சரவணன்.

* * *

10. "இருமொழிப் புலவராய்த் திகழ்ந்து பல்லாண்டுகளாகத் தமிழ் நாட்டிற்குப் பெருந்தொண்டாற்றி வரும் பண்டிதமணி யவர்களுடைய உருவப்படத் திறப்புவிழா இனிது நிறைவேறுமாறு இறைவனை வழுத்துகின்றேன்."

அ. சிதம்பரநாதன்.

* * *

11. "திரு. பண்டிதமணி அவர்கள் வடமொழிப் புலமையும் தென்மொழிப் புலமையும் ஒருங்கு பெற்றவர் என்பதைத் தமிழ் நாடு முழுவதும் நன்கு அறியும்......... இருபதாம் நூற்றுண்டுப் புலவர் தொகுதியில் தலைமை பெற்று விளங்கும் பெற்றி என் ஆசிரியர் பெருந்தகையாகிய திரு. பண்டிதமணி அவர்களுக்கே உரியதாகும் என்று கூறுவேனுகில் அது புனைந்துரையாகாது. தமிழ் நாட்டில் ஆங்கி

லப் பட்டமின்றி முதல் முதலாகத் தமிழ்ப் பேராசிரியர் (Professor of Tamil) பதவி பெற்றவர் என் ஆசிரிய ரன்ரே.!"

பூ. ஆலாலசுந்தரன்.

* * *

12. "வடமொழி, தென்மொழி, இவ்விரு தொன்மொழி களிலும் சிறப்புறு புலமையும், அதற்கேற்ற நாவன்மையும், எழுத்துவன்மையும் ஒருங்கே யமையப்பெற்ற பண்டிதமணி யவர்களின் உருவப்படத் திறப்புவிழாவைத் தாங்கள் கொண் டாடுவது மிகவும் பொருத்தமானதே."

S. ருத்திரபதி.

* * *

வாழ்த்து

13. "சீர்மிக் கோங்கிப் பலவளமுந்
திகழு மேலைச் சிவபுரியிற்
பேர்மிக் கோங்கு பழநியப்பப்
பெரியோன் பெற்ற பெரும்பேற்ருல்
ஏர்மிக் கோங்க இனிதுதித்த
ஏந்தல் சாமி நாதனெனுங்
கார்மிக் கோங்கப் புரிதருமன்
கற்ருேர்க் கொருகற் பகம்போல்வான். க

அண்ணு மலேப்பல் கலேக்கழகத்
தந்தீந் தமிழ்ப்பே ராசிரியன்
பண்ணுர் கலேப்பண் டிதமணியாம்
பட்ட மியைந்த கதிரேசன்
தண்ணு ரமுத மொழிபொழிவோன்
தனதின் னுருவத் திருப்படத்தைக்
கண்ணு லெவருங் கண்டுவப்பக்
கவின வியற்றிக் களிகூர்ந்தே. உ

நங்நாட்டு மன்னர்தரு முயர்ந்தபட்டம்
பலவுமுற்றெந் நாளுந் தூய
பொன்னாட்டிந் திரனிகர்த்த புனிதன் அண்ணா
மலைநாமம் புனைந்த பூபன்
எங்நாட்டு மிசைபரப்பு தன்பெயர்ப்பல்
கலைக்கழக மியற்றிக் காக்குந்
தென்னாட்டு வோன்கரத்தாற் றிறப்பித்தா
ணிவன்சீர்மை செப்பற் பாற்றோ. ௩

விக்கிரமப் பெயர்யாண்டு மிதுனரவி
யிருபானின் மேலோர் நான்காந்
தக்ககதி ரவன்வாரம் கதிரேசப்
பெயர்புனைந்தோன் றனது மேன்மை
மிக்கவுரு வப்படத்தைச் செட்டிநாட்
டரசனென விபுலங் கூறும்
திக்கனைத்தும் பரவுபுகழ் திகழ்அண்ணா
மலைப்பெரியான் திறந்திட் டானே."

சு. நல்லசிவன் பிள்ளை.

* * *

14. "தமிழ் நாட்டின் தவப்புதல்வர்கள் இருவருள் புலவர் உருவத்தைச் சீமான் நிலைநாட்டும் விழாவில்......... கூடுமானால் வந்து கலந்து கொள்வேன்."

(கருமுத்து) தியாகராஜன்.

* * *

15. "தமிழகத்தின் தவப்பயனாக வந்த பேராசிரியர் பண்டிதமணியவர்களின் தொடர்பைப் பெரிதும் கொண்ட சன்மார்க்க சபா மண்டபத்தில், அவர்களின் திருவுருவப் படத்தை நிறுவுவதும், அதுவும் தனவணிகப் பெருஞ்செல்வ ராகிய ராஜா அவர்கள் திருக்கரத்தால் என்பதும் அறிந்து பெருமகிழ் வெய்துகிறேன்."

(வயிநாகரம்) வே. இராமநாதன்.

16. "நம் தனவைசிய சமூகத்தில் ஓர் ஒப்பற்ற மணியாய், பண்டிதமணியாய் விளங்கும் ஒருவரை, நம் கண்மணி போற் போற்றவேண்டுவது நம் முதற்கடமையன்றோ !"

பாகனேரித் தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்க அமைச்சர்.

* * *

17. "நம் தனவணிக மரபில் உதித்தவரும், கல்வியிற் சிறந்தவரும், எல்லா அறிவாளிகளாலும் புகழப்பெற்று "பண்டிதமணி" என்னும் உயர்பட்டம் பெற்றவருமான உயர்திருவாளர் - கதிரேசன் செட்டியாரவர்களுடைய உருவப் படத்தைத் தங்கள் சங்கத்தில் திறந்து வைப்பதைக் குறித்து நாங்கள் மிக மகிழ்ச்சியடைகின்றோம்."

சரஸ்வதி சங்க அமைச்சர்.

இயன் மொழி வாழ்த்து*

சீர்பூத்த மகிபாலன் நகர்ப்பிறந்து
    தனவணிகர் செல்வ மாகிப்
போர்பூத்த கலைபயின்றே யிருமொழிப்பண்
    டிதமணியாம் பெயரும் பெற்றோய் !
கார்பூத்த வளஞ்சிறக்குங் கையுடையோய் !
    கதிரேசக் கனமாப் பேரோய் !
பார்பூத்த நின்புகழைச் சித்திரிப்ப
    நட்பதனால் பான்மை பெற்றேன். க

---

*மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபை மண்டபத்தில் விக்கிரம ஆண்டு ஆனித் திங்கள் 24-ஆம் நாள் (7-7-1940) ஞாயிற்றுக் கிழமைப் பிற்பகல் 4 மணிக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் உருவப்படத்தை, டாக்டர் செட்டிநாட்டு ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார், Kt. L. L. D., அவர்கள் திறந்து வைத்தபோது பாடியது.

பொன்மொழியாம் வடமொழியில் இலக்கணங்கள்
பலகற்ற புலத்தான் மிக்கோய்
இன்மொழியாந் தமிழியலும் பலகற்பான்
நிலமுதித்தோ மெனுநாண் கொண்டே
தென்மொழியிற் கதிரீச னெனும்பெயரைத்
திரித்திடினும் தெளிகி லேமோ?
என்மொழியு நவில்வள்ளல் கதிரேச!
வுன்சூட்சி இசைக்கப் போமோ? உ

அசைவில்லாச் சன்மார்க்க சபைநட்ட
முப்பத்தோர் ஆண்டு முற்றும்
இசையுறுநின் னறிவுதனைச் சித்திரிக்க
வவ்வவையோர் இயலா தாகத்
திசைமுகனும் வசைமுகனுய் மன்மதனு
முன்மதனுய்த் தியங்கக் கண்டார்
நசையுறுநின் னுருவமெனில் கதிரேச
வியற்புலவ! நயந்தா னென்னே! ௩

ஆங்கிலத்தில் பெரும்பட்டம் பெற்றோர்கள்
அனைத்தமிழை அறிவார் தாமே
*ஆங்கிலம்போ லீங்கிலமே யெனத்தமிழின்
குணங்கெடவே யாய்வார் குற்றம்
பாங்கிலுறு மம்மொழியின் நன்பொருளுந்
தமிழில்வரப் பாரார் நின்போல்
ஓங்குகதி ரேசமணி! வடமொழியால்
தமிழுயர்த்து முணர்ச்சி மேலோய்! ௪

---

* அம்மை போல் இம்மை இல்லோம்.

அமிழ்தினிலு மினியதமிழ் கற்றோர்கள்
பிழைப்பின்றி அடைய நோக்கி
இமிழ்திரைசேர் இந்நிலத்திற் றமிழ்வாழ்ந
ரெனவறுமை எதுவும் மாய
உமிழ்தரவே வாழ்வுதரும் பேருதவி
யுன்பாலே ஒளிரக் கண்டோம்
தமிழ்மொழிக்கோர் தாயெனநீ கதிரேசப்
பெரும்புலவ ! சாதிப் பேமால். ரு

பலகலைகள் பயில்கழகப் பன்மொழியின்
மாணவர்கள் பலரு முய்ய
நலகலையா லுயரண்ணு மலைவணிகப்
பெருஞ்செல்வன் நயந்து நல்லோர்
திலகமெனக் கதிரேசக் குலமணி ! நின்
னறிவுருவம் திறந்தா னுங்கே
யலகில்வள விம்மன்றில் நின்னுருவப்
படந்திறத்தல் அருமை யாமோ ? சூ

காணரிய வுய்த்துணர்வுஞ் சொல்வன்மை
எல்லாமும் காண வுன்பால்
மாணவையை மண்ணுறுத்துஞ் செல்வமொடு
சித்தாந்த மாண்பு காட்டிப்
பூணரவன் றுளன்பு பொழிமொழியோய் !
கதிரேசப் புலவ ரேறே !
வாணிதிரு மனநோக்க எந்நாளும்
புலவருடன் வாழி மாதோ ! எ

ப. சிங்காரவேற் பிள்ளை,
போர்டு உயர்தரக் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,
குற்றாலம்.

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின்

31-ம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சி

1940 ஜூலைமீ 8-ம்வ திங்கட்கிழமைப் பிற்பகல் 3-30 மணிக்கு விழாத் தொடங்கிற்று. சபைத்தலைவர் திரு. சாமிநாதன் செட்டியாரவர்கள், சன்மார்க்க சபைக்கும் பண்டிதமணி யவர்களுக்கும் உள்ள தொடர்பை யெடுத்துக் கூறி, அவர்களைத் தலைமையேற்று விழாவைச் சிறப்புற நடாத்தித் தரும்படி கேட்டுக்கொண்டார். பண்டிதமணி, திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைவராக அமர்ந்த னர். பல அன்பர் உள்ளூர் வெளியூர்களிலிருந்து வந்து கூடி யிருந்தனர். மாணவரும் மாணவிகளும் இன்னிசையுடன் கடவுள் வாழ்த்துப் பாடினர். தலைவரின் பெருமையைப்பற்றி அழகிய செய்யுள்வடிவில் எழுதப்பட்ட *வரவேற்புப் பத்தி ரத்தைச் சபையின் சார்பாக வித்துவான் திரு. மு. அருணா சலம் பிள்ளையவர்கள் இனிமையாகப் படித்துக் கொடுத்தார் கள். ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க் கலாசாலை மாணவர்கள் பாடல் வடிவில் அமைந்த *வாழ்த்துப் பத்திரத்தை இனிய இசையுடன் படித்துக் கொடுத்தனர். அமைச்சரால் சன் மார்க்க சபையின் முப்பத்தொராம் ஆண்டு அறிக்கை வாசிக் கப்பட்டது. வகுப்புத் தேர்ச்சிக்கும் அதிக நாள் வந்ததற் கும் மாணவ மாணவிகளுக்குத் தலைவரால் பரிசுப் புத்தகங் கள் வழங்கப்பட்டன. தலைவர் முன்னுரை கூறினர். அதன் கண், சபையின் தோற்றம், அதன் வளர்ச்சி, மொழிப் பயிற்சி, சமய ஞானம், இவற்றின் இன்றியமையாமை முதலி

---

*இப்பத்திரங்கள் இரண்டும் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன.

யன விளக்கப்பட்டன. மகாவித்துவான் ரா. இராகவையங்கா ரவர்கள் "ஔவையும் அதிகமானும்" என்பது பற்றியும், தமிழாசிரியர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் "கண்ணகி யென்னும் கற்புத் தெய்வம்" என்னும் பொருள் குறித்தும், வித்துவான் திரு. மு. அருணாசலம் பிள்ளையவர்கள் "பரிமேலழகர் உரைநயம்" என்பது பற்றியும் நுண்ணிய பல ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் சொற்பொழிவாற்றினர். தலைவர் சொற்பொழிவாளரின் கருத்துக்களைத் தழுவி இனிய முடிவுரை கூறினர். வந்தனம் வாழ்த்துக்களுடன் சபை இனிது நிறைவேறியது.

நல் வரவேற்புப் பத்திரம்*

திருமகளுங் கலைமகளுந் திறன்மகளும்
புவிமகளுஞ் சிறந்த சீர்த்தி
யுருமகளும் வாழ்ந்தோமென் றுவப்புறநல்
லறமோங்க வுயர்ந்தோ ரேத்தப்
பெருமைபெறு கானாடு காத்தானுந்
திருநகரிற் பிறங்கு செல்வம்
மருவியசீர் முத்தையவேள் மாண்புறச்செய்
தவத்துதித்த மன்னு வாழ்க. க

---

*மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையில் பண்டிதமணி. திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்களின் உருவப்படத் திறப்புவிழாவில் தலைமை வீற்றிருக்கும் ஹானரபிள் டாக்டர் செட்டிநாட்டு ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் Kt. L. L. D. அவர்களுக்குச் சமர்ப்பித்தது.

மன்னியசெங் தமிழ்நாடு மாண்புமிகப்
பட்டினத்தார் மரபில் வந்தோய்
நன்னயஞ்சால் சுகுணதன நலவணிகர்
குலமுலகில் நாளு மோங்கச்
சொன்னமலை மிசையேற்றுந் தூயமணி
விளக்கெனவே தோன்றுந் தோன்றல்
தன்னிகரி லாதபெருந் தகையண்ணு
மலைவள்ளால் சார்ந்தோர் வாழ்வே. உ

முன்னாளிற் சங்கமிரீஇ முத்தமிழ்பே
ணினர்நிலையின் முதன்மை யாக
இந்நாளி னின்பெயரால் இனியதொரு
நகரமைத்தங் கெவருஞ் சார்ந்து
பண்ணாளும் பயிறரப்பல் கலைக்கழகம்
நிறுவியநற் பண்பை நோக்கின்
மன்னுண்மை கொடையறிவு வலியிவற்றால்
நினையொப்பார் மண்ணில் யாரே. ௩

காலமிட னறிந்தறங்கள் கவின்பெறச்செய்
திடுந்திறனுங் கலைவல் லோரும்
ஞாலமுழு தாள்பவரும் நயக்கும்வகை
யெச்செயலும் நடத்திக் காட்டுஞ்
சீலமுநற் றமிழ்மொழியும் ஆங்கிலமு
மொருங்குணர்ந்த சிறப்புஞ் செல்வம்
போலுயர்நின் பெருங்கொடையும் புகழ்ச்சியுங்கண்
டுலகில்வியப் புறுதார் யாரே. ௪

திருவாலுங் கொடையாலுஞ் செயலறிந்து
செயுஞ்சூழ்ச்சித் திறத்தி னாலும்
மருவாரை வணக்குபெரு வலியாலும்
நிறைந்தமதி மாண்பி னாலும்
பொருவாரி லாதநினைப் போற்றுதற்கன்
றோநம்மைப் புரக்கு மன்னர்
தருவாரா யினர்டாக்டர் ராஜாஸர்
முதல்விருது தழைக்க நன்றே. ௫

இளங்குழவிப் பருவத்தும் இச்சபையெய்
தியமேன்மை இனிதி னோர்ந்து
வளங்கெழுநின் முன்னவனும் இராமசா
மிப்பெரிய வள்ளல் வந்தெம்
உளங்குளிரச் செய்தனனின் ஒப்பறுநல்
வரவுமிதற் குளதா யிற்றால்
களங்கமறும் இக்கழகம் நனிசிறக்கு
மெனக்கருதிக் களிக்கின் றேமால். ௬

குறைவின்றி வளர்பொருளாற் குலம்விளக்கு
மேன்மையினாற் குணத்தாற் கீர்த்தி
மறைவின்றி யுலகறிய வயங்குதலால்
நினக்கினிய வாக்கின் செல்வன்
நிறையொன்று கலைவளஞ்சால் பண்டிதமா
மணியின்பால் நீங்கா நேயம்
உறைகின்ற தெனும்பெற்றி யுணர்த்துகின்ற
துன்வருகை யுயர்கோ மானே. ௭

அத்தகுபண் டிதமணியின் அணியுருவப்
படத்திறப்பை யறிஞர் சூழும்
வித்தகஞ்சேர் சன்மார்க்க சபையிதனில்
நிறைவேற்ற விழைந்த வெங்கள்
சித்தமெலாங் களிதுளும்பச் செவ்வியரு
மையும்பலப்பல் செயனு நோக்கா
தித்தருணம் இவணுற்றுச் சிறப்பித்த
தெஞ்ஞான்றும் இதயங் கொள்வேம். அ

ஆக்கன்முத லாங்தொழிலோ ரைந்துமருள்
நடத்தாற்செய் தடியார்க் கின்பம்
பூக்குமணி மன்றுடையான் திருவருளால்
மேன்மேலும் புகழ்மிக் கோங்கி
ஊக்கமுநல் லுடல்வலியும் உலப்பிலாப்
பெருந்திருவும் உயர்வாழ் நாளும்
நீக்கமிலாப் பேரறமும் நிறைதரப்பெற்
றிவ்வுலகில் நீடு வாழ்க. கூ

சன்மார்க்க சபையார்.

நல் வரவேற்புப் பத்திரம்*

பூங்கமல மலர்மேவு பூவையர்வாழ்
வுறத்தமிழும் புனித சைவப்
பாங்குபெறு நெறிமுறையும் பரவிவளர்ந்
திடநலங்கள் பலவு மெய்தத்

---

*மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் 31-ஆம் ஆண்டு நிறைவு விழாத் தலைவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் (Professor of Tamil) பண்டிதமணி - திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்களுக்கு அளித்தது.

தேங்குபெருந் திருவுடைய தனவணிகர்
குலஞ்சிறப்பச் செழியர் நாட்டில்
ஓங்குமகி பாலநகர் உலகறியப்
பிறந்தபுக ழுரவோய் வாழ்க. ௬

செந்தமிழா ரியமென்னுஞ் செழித்தபெருங்
கடன்மூழ்கித் தெளிந்த ஞானம்
தந்துதவு மிலக்கியங்கள் இலக்கணங்கள்
தருக்கமொடு சமய நூல்கள்
முந்துபெரு நாடககா வியங்களெலா
முகந்துண்டு முழங்கி மின்னி
வந்தமழை முகிலனைய மாண்புமிகு
கதிரேச மதிவல் லோனே. ௨

அன்னையர்க்குத் தவப்புதல்வர் அறிந்தாற்றுங்
கடமையென அருந்த மிழ்க்கு
மன்னுபொரு ளூலாதி வடமொழியிற்
பெயர்த்தணிந்தும் மருவு தாயென்
றுன்னியவம் மொழிவடிவில் உயர்நூல்கள்
யாத்தணிந்தும் உய்ந்தோர் போற்ற
நன்னர்முது நூலாய்ந்து நடத்துஞ்சொற்
பொழிவாலும் நயஞ்செய் வோயே. ௩

செங்கதிரோன் ஒளிவிரவாத் தேயமிலை
யஃதேபோற் சிறந்த கல்வி
யெங்கதிரே சப்பெரியோய் நின்றலைமை
பெறுதசபை யாண்டு மில்லை

துங்கமது ரையிற்பாண்டித் துரைநிறுவு
தமிழ்ச்சங்கந் தொடங்கு நாள்தொட்
டங்கதன்கல் விக்குழுவில் ஆற்றுநிரு
வாகத்தில் அமர்ந்தா யைய. ௪

சென்னையண்ணா மலைநகரம் திருவனந்தை
யெனுமிவற்றிற் செழிப்பு வாய்ந்து
மன்னியபல் கலைக்கழக மொருமூன்று
நினைமதித்து மகிழ்ந்த ளிப்பத்
துன்னியமா ணவர்தகுதி சோதித்தல்
கற்பதற்குத் தொடங்கு நூல்கள்
இன்னவின்ன வெனவிதித்தல் இவையியற்றுங்
குழூஉத்தலைமை யேற்றாய் நீயே. ௫

ஆற்றல்மிகு செட்டிநாட் டரசன்அண்ணா
மலைவள்ளல் அரிதி னாய்ந்து
தோற்றியபல் கலைக்கழகந் துகளறுநின்
அறிவினயந் தோய்ந்த கல்விப்
பேற்றினைப்பல் லோர்விரும்பிப் பெறப்பெரும்பே
ராசிரியப் பேறு நல்கி
வீற்றிருக்கச் செய்ததுநின் மதிவலியைக்
கண்டன்றோ மேதக் கோனே. ௬

சன்மார்க்க சபையென்னுந் தகுமகவை
யளித்தலிற்றாய் தந்தை யென்பேம்
பன்மார்க்கத் தினும்உழைத்துப் பரிந்துவளர்த்
தலிற்செவிலிப் பாவை யென்பேம்
புன்மார்க்கந் தவிர்த்ததனை யியக்குதலா
லுயிரென்பேம் புலமை மிக்கோய்
நன்மார்க்கம் அறிவுறுத்து நடத்துதலாற்
குருவெனவும் நவிலு வோமே. ௭

சேரலன்தென் னவன்சோழன் எனும்வேந்தர்
மூவருஞ்செங் கோல்செ லுத்திப்
பேர்பெறுமும் மண்டலத்தும் பிறங்குபெருங்
கலாநிலையம் பேணி யுன்றன்
சீர்பெருகு தமிழ்த்தலைமை சேர்ந்துளவால்
பிறிதுமொரு தேஎத்துண் டேனும்
ஆர்பெறுவார் நினையன்றி யவையுநினக்
குரிமையென லாகு மன்றோ. அ

எண்டிசையும் புகழ்மணஞ்செய் பண்டிதமா
மணியேயிச் சபையின் ஏற்றங்
கொண்டமுப்பத் தோராண்டிற் கூடியநல்
விழாத்தலைமை குலவச் செய்தாய்
அண்டர்பிரான் திருவருளால் உடல்நலமா
தியநலங்க ளனைத்து மெய்தி
வண்டமிழ்க்குத் தொண்டுசெய்து வையமிசை
நீடூழி வாழ்க மாதோ. கூ

சன்மார்க்க சபையார்

மாணவர் வாழ்த்து*

நீர்மலி வேணிப் பரனரு ளாலே
நிலவும் வணிகர் தவப்பயன் போலே
சீர்மகி பாலப் பதிமிசை யுற்றோன்
தேசு மிகுங்கதி ரேசப்பேர் பெற்றோன்

---

*மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் 31-ஆம் ஆண்டு நிறைவுவிழாத் தலைவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் (Professor of Tamil) பண்டிதமணி. திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்களுக்குக் கூறியது.

மாமலி யுந்தமிழ் ஆரிய மாகும்
மாண்புறு நூற்கடல் வாரி நுகர்ந்தோன்
ஏர்மிகு பண்டித மாமணி யென்றே
எண்டிசை யும்புகழ் கொண்டிடு வோனே. ௧

பாவிய சீர்த்திஅண் ணாமலை வேள்செய்
பல்கலைக் கூடநற் பாவல னாகித்
தீவிய செந்தமிழ்த் தாய்ப்பணி செய்யும்
சேயர் குழுவிற் சிறப்புறு வோனே
காவிய மென்னுங் கவினரங் கேறிக்
காண்டகும் ஓவியம் காட்டுகிற் போனே
தேவியல் நாவல ராதியர் பாவில்
சிந்தைக் கினியன தேர்ந்துரைப் போனே. ௨

இந்து முடிக்கணி யீசன டிப்போ
தெப்பொழு தும்புகழ் ஒப்பில் குணத்தோன்
செந்தமி ழன்னைக் கணிகல னாகத்
தெள்ளிய நூல்பல செய்தளிப் போனே
நந்த மவைக்கொரு நல்லுயி ராகி
நாளுங் கலைப்பணி நாடிடு வோனே
சந்தத மும்நலன் சார்ந்திவன் வாழச்
சங்கரன் பாதம் தலைக்கணி வோமே. ௩

ஸ்ரீகணேசர் செந்தமிழ்க் கலாசாலை மாணவர் சன்மார்க்க சபை